TNTT070013412015

Presented on : 30-12-2015
Registered on : 30-12-2015
Decided on : 16-06-2026
Duration : 10 years, 5 months, 17 days

| | |
|---|---|
| நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2<br>முன்னிலை – திருமதி.M.மணிமேகலா, M.A., M.L.,<br>நீதித்துறை நடுவர் எண்.2 கோவில்பட்டி.<br>2026–ம் ஆண்டு ஜீன் மாதம் **16** ம் நாள் செவ்வாய்கிழமை<br>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.566/2015 | |
| குற்றமுறையீட்டாளர் | தமிழ்நாடு மாநில அரசு சார்பில்<br>காவல் உதவி ஆய்வாளர்<br>கோவில்பட்டிமேற்கு காவல் நிலையம்<br>குற்ற எண். 940/2015 |
| அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் | திரு. காளிதாஸ் |
| எதிரி | சண்முகராஜ், (வயது 37/2026)<br>த/பெ. நிரைப்பாண்டி,<br>தர்மத்தூரணி,<br>சங்கரன்கோவில்,<br>திருநெல்வேலி மாவட்டம். |
| எதிரி தரப்பில் வழக்கறிஞர் | திரு. சிவா |

இவ்வழக்கானது 30.12.2015 தேதியன்று இந்நீதிமன்றத்தால் ஆண்டுபட்டிகை வழக்கு எண். 566/2015 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. சிவா அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆழ்ந்த பரிசீலணையில் இருந்து வந்து இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு,

சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

| Sl. No. | Name of the Police Station and crime Number of the offence | Description of the Accused | | | | | Date of | | | | | | | | | Explanation of delay |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Name | Father's name | Occupation | Residence | Age | Occurrence | Complaint | Apprehension | Release on bail | Commitment | Commitment of Trial | Closure of Trial | Sentence or order | Service of copy judgment or finding on accused | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) |
| 1 | Kovilpatti West P.S, Cr.No. 940/2015 U/s. 379 IPC | Shunmugaraj | Niraipandi | --- | Tharmathoorani | 37 | 04.12.2015 | 04.12.2015 | 02.02.2016 | 18.12.2015 | NA | 03.06.2026 | 09.06.2026 | 16.06.2026 | ' | N.A |

## தீர்ப்புரை

1. கோவில்பட்டிமேற்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரி மீது இதச பிரிவு 379 –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கு.வி.மு.ச பிரிவு 173(2)ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற இறுதியறிக்கையை பரிசீலனை செய்து 30.12.2015 ம் தேதியன்று ஆண்டு பட்டிகை வழக்கு எண். 566/2015 ஆக எதிரி மீது இதச பிரிவு 379 –ன் கீழ் கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரி ஆஜராவதற்காக வழக்கினை 02.02.2016 ம் தேதியன்று முதல் வாய்தாவிற்காக ஒத்தி வைக்கப்பட்டது.

3. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அவருக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கப்பட்டு, ஆவணங்களை படித்து பார்க்க போதிய கால அவகாசம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் எதிரி மீது இதச பிரிவு379–ன் கீழ் 23.02.2016 அன்று குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவிய போது, எதிரி தன் மீதான குற்றச்சாட்டை மறுத்து வழக்கினை நடத்த விரும்புவதாக கூறினார்.

4. எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபனம் செய்ய அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையான சான்றாவணங்கள் வரையும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் TN 69 AX 9954 Hero Honda இருசக்கர வாகனம் ஒன்று பி.ஆர்.எண். 295/15 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u> –

இவ்வழக்கின் கடந்த 04.12.2015 ம் தேதி காலை 09.00 மணிக்கு, இனாம்மணியாச்சி, பைபாஸ் ரோட்டில் உள்ள கும்பகோணம் காப்பி கடை முன்பு, சாட்சி1 கனகராஜ்–க்கு சொந்தமான TN 69 AX 9954 Hero Honda வண்டியை நிறுத்திவிட்டு, காப்பி குடித்துக்கொண்டு இருக்கும்போது எதிரி தனது ஆதாயத்திற்காக சுமார் 30,000/– மதிப்பிலான வண்டியை திருடியுள்ளார்.

(1) 04.12.2015 ம் தேதி காலை 10.00 மணிக்கு கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய தலைமைக்காவலர் திரு.அசோகன் நிலைய பொறுப்பில் இருந்தபோது சண்முகையா மகன் கனகராஜ் என்பவரிடமிருந்து புகார் மனு அ.சா.ஆ 1 ஐ பெற்று அதன் தன்மைக்கேற்ப கோவில்பட்டிமேற்கு காவல் நிலைய குற்ற எண் 940/2015, இதச பிரிவு 379–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 2 ஐ பதிவு செய்துள்ளார்.

(2) பின்னர் சார்பு ஆய்வாளர் நியூட்டன் ஜெபராஜ் 04.12.2015 ம் தேதி 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுரேஷ் மற்றும் செல்லத்துரை ஆகியோர்கள் முன்னிலையில் விசாரித்து பார்வை மகஜர் அ.சா.ஆ.3 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.4 ஐ தயார் செய்து இவ்வழக்கின் புகார்தாரர் கனகராஜ், இசக்கிராஜ், அலெக்ஸ் பாண்டியன், சுரேஷ், செல்லத்துரை மற்றும் கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய தலைமைக் காவலர் திரு. அசோகன் ஆகியோரை

தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் தயார் செய்தார். பின்னர், எதிரி ஆஜர் செய்த வழக்கு சொத்தான அ.சா.பொ1 ஆன TN 69 AX 9954 Hero Honda என்ற இருச்சக்கர வாகனத்தை படிவம் 91 அ.சா.ஆ.5ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தார். பின்னர் சாட்சிகளின் வாக்குமூலம் அடிப்படையிலும் புலன் விசாரணை அடிப்படையிலும் எதிரி மீது இதச பிரிவு 379–ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)ன் கீழ் விளக்கி வினவிய போது எதிரி தனக்கு எதிரான சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை.

7. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த வழக்கில் ஆஜரான கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவும், மேலும், நீதிமன்ற ஆவணங்கள் அடிப்படையில் எதிரி குற்றவாளி என தீர்ப்பளிக்கலாம் என்று வாதிட்டார்.

8) எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் அரசு தரப்பு சாட்சிகள் சம்பவ இடம் குறித்து சாட்சியம் அளிக்கவில்லை எனவும், புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையானது காலதாமதமாக பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல எனவும், வழக்கு சொத்து குறித்தும், எதிரி குறித்தும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை

எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி குற்றவாளி இல்லை என விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

9. **<u>தீர்வுக்குரிய பிரச்சினை</u>**

இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில் எதிரியின் மீதான இதச பிரிவு 379–ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?அக்குற்றச்சாட்டின் பேரில் எதிரி தண்டிக்கப்பட வேண்டியவரா? என்பதேயாகும்.

10. இவ்வழக்கின் சம்பவமானது 04.12.2015 ம் தேதி சுமார் 09.00 மணிக்கு நடைபெற்றுள்ளது. புகார் மனு அ.சா.ஆ.1 ஆனது 04.12.2015 ம் தேதி 10.00 மணிக்கு பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆனது பதிவு செய்யப்பட்டுள்ளது.

11. இவ்வழக்கில் புகார்தாரர் கனகராஜ் தற்போது அவரது வசிப்பிடத்தில் இல்லை என கிராம நிர்வாக அலுவலர் அவர்களால் சான்று வழங்கப்பட்டு அரசு தரப்பில் மேற்படி சாட்சி நீக்கறவு செய்யப்பட்டுள்ளது.

12. மேலும், புகர்தாரர் கனகராஜ் அரசு தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து சாட்சியம் அளிக்காத நிலையில், கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.1 இசக்கிராஜ் தனது சாட்சியத்தில் தேதி, மாதம் நியாபகம் இல்லை என்றும், கடந்த 2015 ம் வருடம் ஒரு நாள் காலை 09.00 மணியளவில் தனது உறவினரான கனகராஜ் என்பவர் மணியாச்சி பாலம் அருகே டீ அருந்துவதற்காக வண்டியை நிறுத்தி இருந்தோம் என்றும், TN 69 AS 9944 என்ற பதிவெண் கொண்ட Hero Honda இருச்சக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு டீ அருந்தி கொண்டிருந்தோம் என்றும், பின்னர் வந்து பார்த்த போது கனகராஜ்–

ன் வாகனத்தை காணவில்லை என்றும், ஆகையால் கோவில்பட்டி மேற்கு காவல்நிலையம் சென்று புகார் அளித்ததாகவும், பின்னர் காணாமல் போன இருச்சக்கர வாகனம் மறுநாள் தங்களுக்கு கிடைத்து விட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளநிலையில், மேற்படி வண்டி காணாமல் போனது பற்றி நேரடியாக தனக்கு தெரியாது என்றும், எப்போது காணாமல்போனது தெரியாது என்றும், யார் எடுத்தது என்பது பற்றியும் தனக்கு தெரியாது என்றும், கனகராஜ் சொல்லிதான் வண்டி காணாமல்போனது பற்றி மறுநாள் தனக்கு தெரியும் என்று அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

13. மேலும், மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 அலெக்ஸ்பாண்டியன் தனது சாட்சியத்தில் அ.சா. 1 தனது உறவினர் என்றும், தேதி, மாதம் நியாபகம் இல்லை என்றும், சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அ.சா.1ன் கம்பெனியில் வேலை செய்த கனகராஜ் என்பவரின் இருச்சக்கர வாகனத்தை மந்தித்தோப்பு கிருஷ்ணா நகரில் காணாமல் போனதால் அவர் காவல்நிலையத்தில் புகார் அளித்திருந்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளநிலையில், மேற்படி வண்டி காணாமல் போனது பற்றி நேரடியாக தனக்கு தெரியாது என்றும், எப்போது காணாமல்போனது தெரியாது என்றும், யார் எடுத்தது என்பது பற்றியும் தனக்கு தெரியாது என்றும், அ.சா.1 சொல்லிதான் வண்டி காணாமல்போனது பற்றி மறுநாள் தனக்கு தெரியும் என்று அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

14. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை ஆராய்ந்து பார்க்கும் போது அ.சா.1 மற்றும் அ.சா.2 இருசக்கர வாகனம் திருட்டு சம்பவம் குறித்து சாட்சியம் அளித்திருந்தபோதிலும், மேற்படி திருட்டானது எதிரியால் ஏற்படுத்தப்பட்டது என்பது குறித்து சாட்சியம் எதுவும் அளிக்கப்படவில்லை. இந்நிலையில் உறுதியூட்டம் இல்லாத காவல் அதிகாரியின் சாட்சியத்தையும் ஆவணங்களையும் வைத்து மட்டுமே எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு

தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டு விட்டதாக தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15. எனவே எதிரி தான் புகார்தாரரின் இருசக்கர வாகனத்தை திருடி சென்றார் என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

இறுதியாக, அரசு தரப்பு வழக்கினை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காத நிலையினை எதிரிக்கு அளித்து எதிரி இதச பிரிவு 379–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் பி.ஆர்.எண். 295/2015 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்தான அ.சா.பொ.1 TN 69 AX 9954 Hero Honda இருசக்கர வாகனம் ஒன்றை மனுதாரர் கனகராஜ் அவர்கள் சி.ஆர்.எம்.பி.எண். 2881/2016 ல் பெற்றுச் சென்றுள்ளார். மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு மனுதாரரே நிரந்தரமாக வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

எதிரியால் சி.ஆர்.எம்.பி எண். 11269/2015 ல் இந்நீதிமன்றத்தால் 18.12.2015 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் 18.12.2015 ம் தேதி எதிரியால் எழுதி கொடுக்கப்பட்ட பிணைமுறிவு பத்திரமும் ரத்து செய்யப்படுகின்றன.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால்

பிழைகள் திருத்தப்பட்டு 2026 ஆண்டு ஜீன் மாதம் 16 ம் தேதி அன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்)...M. மணி மேகலா/16.06.2026
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
கோவில்பட்டி.

அரசு தரப்பு சாட்சிகள்

| அ.சா | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர்கள் | அரசு தரப்பு சாட்சிகளின் விவரம் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
|---|---|---|---|---|
| அ.சா.1 | இசக்கிராஜ் | சம்பவ சாட்சி | 03.06.2026 | 03.06.2026 |
| அ.சா.2 | அலெக்ஸ்பாண்டியன் | சம்பவ சாட்சி | 03.06.2026 | 03.06.2026 |
| அ.சா.3 | நியூட்டன் ஜெபராஜ் | சார்பு ஆய்வாளர் | 08.06.2026 | 08.06.2026 |

அரசு தரப்பு சான்றாவணங்கள்

| அ.சா.ஆ | சான்றுகளின் விவரம் | தேதி |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனு | 08.06.2026 |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை | 08.06.2026 |
| அ.சா.ஆ.3 | பார்வைமகஜர் | 08.06.2026 |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | 08.06.2026 |
| அ.சா.ஆ.5 | படிவம் 91 | 08.06.2026 |

அரசு தரப்பு சான்றுப் பொருள் – அ.சா.பொ.1 TN 69 AX 9954 Hero Honda இருசக்கர வாகனம்

எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் – இல்லை

நீதிமன்ற சாட்சிகள், சான்றாவணங்கள் – இல்லை

(ஒப்பம்)...M. மணி மேகலா/16.06.2026
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
கோவில்பட்டி.

குறிப்பு –

1. வழக்கு விசாரணையின் போது எதிரி நீதிமன்ற காவலில் இருந்தார்.

2. இவ்வழக்கில் எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இவ்வழக்கின் தீர்ப்பு முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

Dictated on : 15.06.2026
Transcribed on : 15.06.2026
checked on : 16.06.2026
Signed on : 16.06.2026

Visit **ecourts.gov.in** for updates or download mobile app “**eCourts Services**” from Android or iOS

## CASE-SUMMARY

## C.N.R.No. TNTT07-001341-2015

| Sl. No | Details | | Particulars | |
|---|---|---|---|---|
| 1 | Period of Remand of the Accused | | 04.12.2015-18.12.2015 | |
| 2 | Date of Filing of the Final Report | | 30.12.2015 | |
| 3 | Date of Questioning of the Accused under section 281 Cr.P.C | | 23.02.2016 | |
| 4 | Filing of All Miscellaneous Petitions (Except 317 Cr.P.C) | | 437 Cr.P.C Petition Filed on 08.12.2015<br>437 Cr.P.C Petition Filed on 04.12.2015<br>451 Cr.P.C Petition Filed on 15.06.2016<br>70(2) Cr.P.C Petition Filed on 25.10.2025<br>311 Cr.P.C Petition Filed on 08.06.2026 | |
| 5 | Date of Examination in chief and cross examination of witnesses | | Chief | Cross |
| | | P.W.1 | 03.06.2026 | 03.06.2026 |
| | | P.W.2 | 03.06.2026 | 03.06.2026 |
| | | P.W.3 | 08.06.2026 | 08.06.2026 |
| 6 | Date of Questioning u/s.313 Cr.P.C | | 09.06.2026 | |
| 7 | Details of abscondence of an accused | | - | |
| 8 | Grant of Stay by Superior Courts | | - | |

**(Sd)....M..Manimegala/16.06.2026**
Judicial Magistrate No.II,
Kovilpatti.